# சமாதானத்தை மீளக்கட்டியெழுப்புவதில் உள்ள சிரமம்

## (2 சாமுவேல் 20)

*அப்சலோமின் கலகம் மற்றும் மரணம் ஆகியவற்றிற்குப் பின்பு, தாவீது எருசலேமுக்கு மீண்டும் திரும்புவதற்குத் தயார் செய்து கொண்டிருந்த போது, அவர் நாட்டின் சமாதானத்தை மீண்டும் கட்டி எழுப்ப விரும்பினார். அவர் எருசலேமுக்குத் திரும்பி வருவதில் முன்னின்று வழிநடத்தும்படி யூதா கோத்திரத்தாரிடம் அவர் விடுத்த வேண்டு கோளானது துரதிருஷ்டவசமாகப் பழைய காயங்களைக் கிளறி விட்டது. வடக்கில் இருந்த பத்து கோத்திரத்தாரும் தாங்கள் சிறுமைப்படுத்தப் பட்டதாக நினைத்தார்கள். விரைவிலேயே யூதாவின் தலைவர்களும் வடக்குக் கோத்திரங்களின் தலைவர்களும் போரில் இறங்கினார்கள்.*

*2 சாமுவேல் 20ஐத் தொடர்ந்து வரும் வரலாறானது, சமாதானத்தை மீளக்கட்டியெழுப்புதல் என்பது எவ்வளவு கடினமானது என்பதை விவரிக்கின்றது.*

### *சிலர் சமாதானத்தை விரும்புவதில்லை*

*சூழ்நிலையைத் தனக்கு அனுகூலமாக எடுத்துக் கொண்டு, பென்யமீன் கோத்திரத்திலிருந்து வந்த "சேபா என்னும் பேருள்ள பேலியாளின் மனுஷன்" (20:1அ), அப்சலோமின் புத்தகத்திலிருந்து ஒரு பக்கத்தை அப்படியே பிரதி எடுத்துக் கொண்டு (காப்பி அடித்தல் என்று நாம் கூறுவது போன்றது), ஒரு கலகம் நடத்த முடிவு செய்தான், "எங்களுக்குத் தாவீதினிடத்தில் பங்கும் இல்லை, ஈசாயின் குமாரனிடத்தில் எங்களுக்குச் சுதந்தரமும் இல்லை, இஸ்ரவேலே நீங்கள் அவரவர் தங்கள் கூடாரங் களுக்குப் போய்விடுங்கள்" (20:1ஆ) என்பதே அவனது பேரணிக் கூச்சலா யிருந்தது. இதே உணர்கருத்து சாலொமோன் இறந்த பின்பு இராஜ்யம் பிளவு பட்டபோது (மீண்டும்) பயன்படுத்தப்படும் (1 இரா. 12:16)!*

### *சிலரால் கடந்த காலத்தை மறக்க முடிவதில்லை*

*வசனம் 3, அப்சலோம் பாலுறவு கொண்டிருந்த தாவீதின் பத்து மறுமனையாட்டிகளையும் தாவீது நடத்திய விதம் பற்றி நமக்குக் கூறுகின்றது. நம்மைப் பொறுத்தமட்டில் தாவீதின் அந்த நடவடிக்கை*

நியாயமற்றதாகக் காணப்படுகின்றது - மற்றும் ஒருவேளை அது அவ்வாறு இருந்திருக்கலாம் - ஆனால் அப்படிப்பட்ட ஒரு விஷயம் அந்த நாட்களில் எவ்வாறு நோக்கப்பட்டிருக்கும் என்பதை நாம் அறிவது இல்லை. ஒருவேளை அந்த மறுமனையாட்டிகள் "அசுத்தமானவர்கள்" என்று கருதப்பட்டிருக்கலாம். ஒருவேளை அவர்களை அவ்வாறு நடப்பித்தது அவசியமான புலனுணர்வு பாடமாக இருந்திருக்கலாம். எவ்வகையில் பார்த்தாலும், இந்த முழு விஷயமும் கவலைக்குரியதாகவும், மற்றவர்களின் பாவங்களால் ஒன்றும் அறியாதவர்கள் எவ்வாறு அடிக்கடி துன்புறுகின்றனர் என்பதை விவரிப்பதாகவும் உள்ளது.

### சிலர், சமாதானத்தைக் காட்டிலும் சுயநலம் பற்றி மிகவும் அக்கறை கொண்டுள்ளார்கள்

வடக்குக் கோத்திரங்கள் சேபாவைப் பின்பற்றுவதாக வார்த்தை தாவீதை வந்து அடைந்தது. அரசர் உடனடியாகத் தமது புதிய தளபதியான அமாசாவுக்கு, மூன்று நாட்களுக்குள் யூதாவின் இராணுவத்தை ஒன்று கூட்டும்படி கட்டளையிட்டார். அமாசா குறித்த காலத்தில் அதைச் செய்ய இயலாது போயிற்று (அவர் [அமாசா] ஒரு சில வாரங்களுக்கு முன்பு தாவீதை எதிர்த்து நிற்கும்படி கட்டளையிட்டு இருந்தபடியால், அநேக மாகப் போர் வீரர்கள் அவரைப் பின்பற்றுவதை வெறுத்திருக்கலாம்). குறித்த காலத்தில் அமாசா திரும்பி வராதபோது, தாவீது பதட்டம் அடைந்தார். அவர் ஒரு நல்லெண்ணச் சைகையாகவே அமாசாவை [தளபதியாக] நியமித்திருந்தார்; இப்பொழுது அமாசா மீண்டும் தமக் கெதிராகத் திரும்பிவிட்டாரோ என்று அவர் பயமடைந்தார். அமாசாவைக் கண்டுபிடிப்பதற்காகத் தாவீது, ராஜாவின் [தமது] சொந்தப் பாதுகாப்புப் படையினருடன் (யோவாபின் இரத்தப்பிரியனான சகோதரனான) அபிசாயை அனுப்பி வைத்தார். யோவாப் பதவி இறக்கப்பட்டதால் ஏற்பட்ட மனப் புண்ணுடன் இன்னமும் படைவீரர்கள் மத்தியில் இருந்தார்.

தாவீதின் மனிதர்கள் ஒரு சில மைல்கள் தூரமே நடந்து சென்றபோது கிபியோனுக்கு அருகில் அமாசாவைக் கண்டார்கள். யோவாப் தமது ஒன்று விட்ட சகோதரனான அமாசாவை, "என் சகோதரனே சுகமாயிருக்கிறாயா?" (20:9) என்று வாழ்த்தினார். யோவாப் முன்னால் சென்ற வேளையில், அவரது பட்டயம் அதன் உறையிலிருந்து தரையில் விழுந்தது. யோவாப் அந்த ஆயுதத்தை எடுத்து, அமாசாவை நெருங்குகையில் அதைத் தம் கையில் தளர்வாகப் பிடித்திருந்தார். அந்த நிகழ்ச்சி தற்செயலானது போல் காணப்பட்டதால், அமாசா ஒன்றுக்கும் ஐயப்படவில்லை. யோவாப் அமாசாவின் தாடியைப் பிடித்து, அவரைக் கன்னத்தில் முத்தமிடப் போவது போல் தம்மை நோக்கி இழுத்தார். ஆனால் முத்தமிடுவதற்குப் பதிலாக, அந்தக் கசப்புமிக்க முதிய போர் வீரர் தமது ஆயுதத்தை அமாசாவின் வயிற்றினுள் ஆழமாகச் செருகி அதன் வெட்டும் பகுதியை வயிற்றினுள் சுழற்றி, தமது எதிரியின் வயிற்றில், உள்ளவற்றை வெளியேற்றினார். "அமாசா நடுவழியிலே [தமது] இரத்தத்திலே புரண்டு கிடந்தார்" (20:12).

யோவாப் மீண்டும் பொறுப்பிற்கு வந்தார். யோவாப், "வழிநடத்து

வதற்கான எனது உரிமையின்மீது எவனாவது அறைகூவல் விடுக்க விரும்பு கின்றீர்களா?" என்று கேட்பதுபோல் இரத்தம் தோய்ந்த அந்தப் பட்ட யத்தை, உயர்த்திப் பிடிப்பதை என்னால் கற்பனை செய்ய முடிகின்றது. அவரது மனிதர்களில் ஒருவர், அமாசா ஒன்று கூட்டியிருந்த போர் வீரர்களை நோக்கி "யோவாபின்மேல் பிரியப்படுகிறவன் எவனோ, தாவீதின் பட்சத்தில் இருக்கிறவன் எவனோ, அவன் யோவாபைப் பின்பற்றிப் போவானாக" (20:11) என்று கூக்குரலிட்டார். படையினர் பின்தொடர, யோவாபும் அபிசாயும், கலகக்காரனான சேபாவைக் கண்டு பிடிக்க வடக்கு நோக்கிப் பயணத்தைத் தொடங்கினார்கள். அமாசாவின் மரணக் காட்சியானது அணிவகுத்துச் செல்லுதலைத் தாமதப்படுத்திய போது, யோவாபின் மனிதர்களில் ஒருவர் அமாசாவின் உடலைப் பாதையிலிருந்து எடுத்து அப்புறப்படுத்தி அதை [துணியால்] மூடினார்.[1]

### ஒரு சிலர் - ஆனால் மிகவும் சிலர் தாம் - சமாதானம் பற்றி அக்கறையுடன் உள்ளார்கள்

படையானது சேபாவையும் அவனது கலகக்காரக் கும்பலையும் எதிர்நோக்கி, வடக்கே நகர்ந்தது. அவர்கள் கடைசியில் பலஸ்தீனத்தின் வடகோடி முனையில் அவர்களைக் கண்டுபிடித்தார்கள். சேபா தன்னை, தாணுக்கு வடக்கில் இருந்த பெத்மாக்காவாகிய ஆபேல் என்ற கோட்டை சூழ்ந்த நகருக்குள் அரணிப்பாக மறைத்துக் கொண்டிருந்தான். யோவாபின் மனிதர்கள் அதன் அலங்கத்தை நொறுக்கி வீழ்த்துவதற்காக அதன் மதிலை (வெளிச்சுவற்றை) ச் சுற்றி மண் மற்றும் கற்களினால் ஒரு கொத்தளம் கட்டினார்கள்.

மதிலை இடிக்கும் படையினர் உள் மதிலை அடித்து வீழ்த்தத் தொடங்கியபோது, மதிலின் உச்சியில் ஒரு பெண் தோன்றி, தான் யோவாபுடன் பேச வேண்டும் என்று கூறினாள். அவள், தன் பட்டணத்திற்காக வேண்டினாள். அந்த நகரானது தன் ஞானத்தினால் பெயர்பெற்று, "தாய்" பட்டணமாக இருந்ததாகவும், சுற்றிலும் இருந்த நகரத்தார் யாவரும் அதைச் சார்ந்திருந்ததாகவும் கூறினாள். யோவாப், தாம் அந்த நகரை அழிக்க விரும்பவில்லை என்றும், தாம் சேபாவை மட்டும் தேடி வந்திருப்பதாகவும் பதில் அளித்தார். விரைவிலேயே அந்த நகரத்தின் மக்கள், சேபாவின் இரத்தம் தோய்ந்த தலையை மதிலின் மீதிருந்து தூக்கிப் போட்டார்கள்.

யோவாப், பகைமை உணர்வு முடிந்தது என்பதன் அடையாளமாக எக்காளம் ஊதினார் - ஒவ்வொருவரும் தங்கள் இல்லம் திரும்பினார்கள். தாமார் கற்பழிக்கப்பட்டதில் தொடங்கிய நிகழ்ச்சிகளின் தொடரானது கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தது. தாவீது தமது அரசை மீண்டும் ஒருங்கமைத்தார் (20:23-26). நாட்டில் சமாதானம் மீண்டும் ஆளுகை செய்தது என்பது உறுதி.

### சமாதானம் என்பது எளிதில் உடையக் கூடிய விஷயமாக உள்ளது

இது தாவீதின் இடர்ப்பாடுகளின் முடிவாகவோ அல்லது இஸ்ரவேலின்

*இடர்ப்பாடுகளின் முடிவாகவோ இருந்ததில்லை. தாவீதுக்கு அவர் தம் வீட்டாரில் இருந்தே புதிய பிரச்சனைகள் எழும்பின. யோவாப் மீண்டும் படையின் பிரதம தளபதி ஆனார் (20:23). கட்டிடம் கட்டும் திட்டத்தைச் செயல்படுத்தத் தாவீது கட்டாய உழைப்பு முறையை அறிமுகப்படுத்தினார், இது இஸ்ரவேலின் பின்னாளைய பிரிவினைக்கு முக்கியமான காரணியாக இருந்தது (2 சாமு. 20:24ல் "அதோராம்" என்ற வார்த்தையைக் கவனிக்கவும், இ.வ. 1 இரா. 12:18). வடக்கு மற்றும் தெற்குக்கிடையிலான வெறுப்புணர்வு தொடர்ந்து புகைந்து, பின்நாட்களில் சாலொமோனின் மரணத்தின்போது மீண்டும் கொழுந்து விட்டு எரிந்து வெடிக்கத் தயாராயிற்று.*

*சமாதானத்தை மீண்டும் கட்டியெழுப்புதல் என்பது கடினமானதாயிருக்கலாம், எனினும் நாம் அதைச் செய்ய முயற்சிக்க வேண்டும், ஏனெனில் தேவன் சமாதானத்தை விரும்புகின்றார். "சமாதானம் பண்ணு கிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப் படுவார்கள்" என்று நாம் வாசிக்கின்றோம் (மத். 5:9; இ.வ. கலா. 5:22; யாக். 3:17).*

---

*குறிப்பு:*

*[1]அந்தக் கொலைக்காகத் தாவீது யோவாபை உடனடியாகத் தண்டித்து விடவில்லை, ஆனால் அதை அவர் மறக்கவுமில்லை (1 இரா. 2:5, 6).*